III ADDITIONAL DISTRICT AND SESSIONS COURT,
THIRUVALLUR AT POONAMALLEE.
O.S.560/2022

Deposition of witness for the Plaintiff/PW1
solemnly by Thiru.M.Muthupandi, Junior Assistant,
in accordance with the provision of Act I for 1873 on 08-04-2026

| | | | |
|---|---|---|---|
| Name | : சுசீலா | Village | : |
| Father's / Husband's Name | : லேட்.பால்ராஜ் | Calling | : |
| Age | : | Taluk | : |

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

(சாட்சி இன்று மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்விக்கப்பட்டு 2 ஆம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி செய்ய அனுமதிக்கப்படுகின்றார்.)

29.05.2014 அன்று நான் எழுதி வைத்த உயிலில் முதல் பிரதிவாதி பி.முருகனை தவிர யாருக்கும் சொந்தமில்லை என்று எழுதி வைத்திருக்கின்றேன் என்றால் சரியல்ல. உயில் என்றால் என்னவென்றே எனக்கு தெரியாது. நான் யாருக்கும் எழுதி வைக்கவில்லை. என்னிடம் காட்டப்படுகின்ற உயிலின் ஒளிப்பட நகலில் உள்ள போட்டோ மற்றும் கையெழுத்து என்னுடையது தானா என்றால் என்னுடையது தான் ஆனால் என்னை எனது பத்திரத்தை முருகன் தொலைத்ததால் அது சம்மந்தமாக பத்திர ஆபிசுக்கு வரச்சொல்லி என்னிடம் கையெழுத்து வாங்கினார்கள். அதன்பிறகு 12.06.2017 பதிவு செய்யப்பட்ட ஆவணம் மூலமாக அந்த உயிலை ரத்து செய்திருக்கின்றேன் என்றால் சரியல்ல நான் உயில் எழுதவும் இல்லை அதனை ரத்து செய்யவும் இல்லை. அந்த ஆவணம் 67/2017 என்று அம்பத்தூர் சார் பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டிருக்கின்றது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. இந்த ரத்து பத்திரத்திலும் பி.முருகன் மனைவி சுசிலா என்று குறிப்பிடப்பட்டிருக்கின்றது என்றால் இது பற்றி எனக்கு தெரியாது. இந்த விவரங்கள் எல்லாம் எனக்கு தெரியும் என்றாலும் நான் இந்த வழக்கிற்காக பொய்யாக சொல்கின்றேன் என்றாலும் சரியல்ல. நான் சார் பதிவாளர் அலுவலகத்தில் புகைப்படம் எடுக்கும்பொழுது எதற்காக என்று கேட்காததினால் என்னுடைய சம்மதத்தின் பேரில் தான் இந்த ஆவணங்கள் பதிவு செய்யப்பட்டது என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படுகின்ற வா.த.சா.ஆ.3 பத்திரத்தின் அசல் தான் தொலைந்து போய்விட்டது என்று அம்பத்தூர் காவல் நிலையத்தில் 28.10.2017 அன்று புகார் கொடுத்திருந்தேன் என்றால் சரிதான். அந்த புகார் சம்மந்தமாக 09.11.2017 அன்று

தினக்குரல் செய்தி தாளில் எனது தாயார் எழுதி வைத்த செட்டில்மெண்ட் பத்திரம் தொலைந்து விட்டதாக ஒரு பொது அறிவிப்பு கொடுத்திருக்கின்றேன் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அந்த பொது அறிவிப்பில் பி.சுசிலா க/பெ.பி.முருகன் என்று உள்ளது என்றால் அப்படிபட்ட அறிவிப்பு எதுவும் நான் கொடுக்கவில்லை. அதுபோல சதன்மெயில் என்னும் ஆங்கில செய்தி தாளிலும் நான் ஒரு அறிவிப்பை கொடுத்திருக்கின்றேன் என்றால் சரியல்ல. அந்த அறிவிப்பிலும் பி.சுசிலா W/o.P.Murgan என்று உள்ளது என்றால் சரியல்ல. இது சம்மந்தமாக அம்பத்தூர் காவல் நிலையத்தில் எனக்கு ஒரு missing certificate கொடுத்தார்கள் என்றால் சரியல்ல. அந்த missing certificate ன் அடிப்படையில் தான் 2 ஆம் பிரதிவாதி ஜஸ்டின்பிரான்டஸ் என்பவர் பெயருக்கு வா.த.சா.ஆ.5 கிரைய பத்திரத்தை எழுதிக் கொடுத்தேன் என்றால் சரியல்ல. 2 ஆம் பிரதிவாதி யாரென்றே எனக்கு தெரியாது. என்னிடம் காட்டப்படுகின்ற வா.த.சா.ஆ.5 ஆவணத்திலுள்ள கையெழுத்தும், புகைப்படமும் என்னுடையது தான். என்னிடம் நிறைய கையெழுத்துக்களை பத்திரம் கிடைக்க வேண்டும் என்றால் கையெழுத்து போட வேண்டும் என்று வாங்கினார்கள். இது சம்மந்தமாக நான் காவல் துறையினரிடம் என்னை ஏமாற்றி கையெழுத்து வாங்கினார்கள் என்று புகார் எதுவும் கொடுத்திருக்கின்றேனா என்றால் நான் புகார் கொடுத்தேன் அவர்கள் நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை. நான் பொய்யாக சொல்கின்றேன் என்றால் எல்லா விவரமும் தெரிந்து கையெழுத்து போட்டதால் தான் புகார் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. நான் உண்மையிலேயே புகார் கொடுத்திருந்தால் அந்த ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருப்பேன் என்றாலும் அவ்வாறு கொடுக்காததால் தான் எந்த ஒரு ஆவணத்தையும் நான் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படுகின்ற வா.த.சா.ஆ.5 ஆவணத்திலும் பி.முருகன் மனைவி சுசிலா என்று தான் குறிப்பிடப்பட்டிருக்கின்றது என்றால் என்னை ஏமாற்றுவதற்காக அவர்களாகவே அப்படி போட்டுக்கொண்டுவிட்டார்கள். வா.த.சா.ஆ.5 ஆவணத்தில் என் முழு சம்மதத்தோடு நான் கையெழுத்திடுகின்றேன் என்று குறிப்பிடப்பட்டிருக்கின்றது என்று சொன்னால் என்னிடம் 1000 கையெழுத்து வாங்கினார்கள். கையெழுத்து போட்டால் தான் பத்திரம் வரும் என்று கொலை மிரட்டல் விட்டார்கள். என்னை மிரட்டி கையெழுத்து வாங்கினால் வா.த.சா.ஆ.5 ஆவணத்தில் கண்டுள்ளதை போல என்னுடைய கையெழுத்து தெளிவாக இருக்காது என்று சொன்னால் சரியல்ல. வா.த.சா.ஆ.5 ஆவணத்தில் நான் 2 ஆம் பிரதிவாதி ஜஸ்டின்பிராண்டஸிடமிருந்து ரூ.7,50,000/-மறு பயனாக பெற்றுக்கொண்டு கிரைய

பத்திரத்தை எழுதிக் கொடுத்ததாக கண்டுள்ளது என்றால் நான் யாரிடமும் எந்த பிரதி பலனும் வாங்கவில்லை. 2020 ல் தான் என் பெயரில் எழுத வேண்டியதை அவர்கள் பெயரில் எழுதி கொண்டார்கள் என்பது எனக்கு தெரிய வந்தது. 01.11.2017 அன்று 2 ஆம் பிரதிவாதி 6 லட்சம் ரூபாயை ஸ்ரீராம் டிரான்ஸ்போர்ட் பைனான்ஸ் கம்பெனியிலிருந்து கடனாக பெற்று அந்த தொகையிலிருந்து ரூ.1,10,000/-யை 02.11.2017 அன்று எனது பெயருக்கு காசோலை மூலமாக கொடுத்து அதனை நான் எனது வங்கி மூலமாக வரவு வைத்து பெற்றுக்கொண்டுவிட்டேன் என்றால் சரியல்ல. நான் யாரிடமும் எந்த பணமும் வாங்கவில்லை. மீதமுள்ள தொகையை நான் ரொக்கமாக பெற்றுக்கொண்டு வா.த.சா.ஆ.5 கிரைய பத்திரத்தை எழுதிக் கொடுத்தேன் என்று சொன்னால் சரியல்ல. வா.த.சா.ஆ.5 ஆவணத்தில் பி.முருகன் 2 வது சாட்சியாக கையெழுத்து போட்டிருக்கின்றார் என்றால் நான் யாரிடமும் பணம் வாங்கவில்லை அவர்கள் எல்லாம் கூட்டு. என்னிடம் கிரையம் பெற்ற நாளிலிருந்து 2 ஆம் பிரதிவாதி C அட்டவணை சொத்தினை சுவாதீனம் எடுத்து அவர் அந்த வீட்டில் இருந்தார் என்றாலும் பின்னிட்டு அதனை வாடகைக்கு விட்டிருக்கின்றார் என்றால் இரண்டு ரூமிலும் ஐந்து, ஐந்து பேர்களை வாடகைக்கு வைத்து தலா 1000/- ரூபாய் வசூலித்து வருகின்றார். தாவா சொத்தை கிரையம் பெற்ற தேதியிலிருந்தே 2 ஆம் பிரதிவாதி அதில் அனுபவத்தில் இருந்து வருகின்றார் என்றாலும் அதனால் என்னுடைய வழக்கு கால வரம்பால் பாதிக்கப்பட்டிருக்கின்றது என்று சொன்னால் சரியல்ல. நான் வழக்கிற்காக 2020 ஆம் ஆண்டு தான் கிரையம் பற்றி தெரியும் என்று பொய்யாக சொல்லுகின்றேன் என்றாலும் 2017 ஆம் ஆண்டிலேயே 2 ஆம் பிரதிவாதி சுவாதீனத்தில் இருந்து வருகின்ற விவரம் எனக்கு தெரியும் என்று சொன்னால் சரியல்ல. 21.12.2020 ல் நான் அம்பத்தூர் காவல் நிலையத்தில் கொடுத்த புகாரில் பி.முருகனுக்கு எதிராக தான் புகார் கொடுத்திருக்கின்றேன் என்றாலும் 2 ஆம் பிரதிவாதிக்கு எதிராக புகார் கொடுக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. அந்த புகாரின் பேரில் போலிசார் மேல் நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை என்றால் ஆமாம் மேல் நடவடிக்கை எடுக்கவில்லை அதனால் நான் கமிஷர் ஆபிசுக்கு போய் அழுதேன். அவர்கள் நீதிமன்றத்தில் போய் பரிகாரம் தேடிக்கொள்ளுங்கள் என்று சொல்லிவிட்டார்கள். நான் கமிஷர் அலுவலகத்தில் 18.09.2021 கொடுத்த புகாரிலும் முருகனுக்கு எதிராக தான் புகார் கொடுத்திருக்கின்றேன் என்றாலும் 2 ஆம் பிரதிவாதிக்கு எதிராக புகார் கொடுக்கவில்லை என்றால் எனக்கு 2 ஆம் பிரதிவாதி, 3 ஆம் பிரதிவாதி எல்லாம் தெரியாது. எத்தனை பேர் சேர்ந்து ஏமாற்றினார்கள் என்றும் எனக்கு தெரியாது. கடைசியில் தான் 3 பேர் சேர்ந்து ஏமாற்றினார்கள் என்று

தெரியவந்தது. 2 ஆம் பிரதிவாதி தகுந்த மறுபயன் கொடுத்து தாவா C அட்டவணை சொத்தை என்னிடம் இருந்து கிரையம் பெற்றதால் அந்த கிரையம் செல்லத்தக்கது என்றால் சரியல்ல. 2 ஆம் பிரதிவாதிக்கு எதிராக நான் கோரியுள்ள பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. நான் உண்மை சங்கதிகளை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நானும் 1ஆம் பிரதிவாதி முருகனும் சேர்ந்து கூட்டு சதி செய்து 2 ஆம் பிரதிவாதியை ஏமாற்ற வேண்டும் என்பதற்காக இந்த வழக்கை தாக்கல் செய்திருக்கின்றேன் என்றால் சரியல்ல. என்னுடைய வழக்கை 2 ஆம் பிரதிவாதிக்கு எதிராக தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**